சுற்றறிக்கை இலக்கம்: **10/2002**

எனது இலக்கம்: எம்/1/42
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
340, ஆர். ஏ. டி மெல் மாவத்தை,
கொழும்பு 03.
2002.07.15

அனைத்து மாவட்ட செயலாளர்கள் /
மேலதிக பதிவாளர் நாயகங்கள்

**<u>விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களைச் சேவைக்கு அமர்த்துதல்</u>**

எனக்கு அறிக்கை செய்யப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலுமுள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோருவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

02. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி குறித்து அவதானமாக இருந்து, அந்தந்தப் பிரிவுகளுக்காகக் கிடைக்கும் விண்ணப்பங்களில், உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை மாத்திரம் நிரற்படுத்தி, தாமதமின்றி மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்குப் பணிப்புரை வழங்கவும்.

03. தகுதியற்ற விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை நிராகரித்து, அதற்கான காரணத்தை அந்த விண்ணப்பதாரர்களுக்குப் பதிவுத் தபாலில் அறிவிக்கவும்.

04. விண்ணப்ப விபரப் பட்டியலைத் தயாரித்து, விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைச் சரிபார்த்து அறிக்கை செய்வதற்காகப் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பும்போது, விண்ணப்பதாரர்களின் வசிப்பிடம் மற்றும் சொத்து விபரங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தி, உரிய தகவல்களைச் சரியாகக் கண்டறிந்து அறிக்கை செய்யுமாறு அறிவுறுத்துங்கள்.

05. விண்ணப்பதாரர்கள் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது, அவர்களின் கல்வி மற்றும் ஏனைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைக் கவனமாகப் பரிசோதித்து, அவற்றின் நிழற்படப் பிரதிகள் உண்மையானவை என நேர்முகப் பரீட்சை சபைத் தலைவரால் சான்றுப்படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் இணைத்து

அனுப்புவது அவசியமாகும். மூலப்பிரதிகள் விண்ணப்பதாரர்களிடமே மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.

06. இறுதியாகப் பதவிக்கு தெரிவு செய்யப்படும் நபரின் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைப் பெற்று, நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் மீண்டும் ஒருமுறை அவற்றைச் சரிபார்ப்பது அவசியமாகும்.

07. நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட பின்னர், நேர்முகப் பரீட்சை சபையின் குறிப்புகளை விபரப் பட்டியலில் சரியான நிரலில் உள்ளடக்க வேண்டும். மேலும், விபரப் பட்டியலின் இறுதிப் பக்கத்தில் நேர்முகப் பரீட்சை சபையின் அனைத்து உறுப்பினர்களும் கையொப்பமிடுவது கட்டாயமாகும்.

08. இறுதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதன் பின்னர், எந்தவொரு காரணத்திற்காகவும் விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் மேலதிக சான்றிதழ்கள் அல்லது ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை இத்துடன் அறியத்தருகின்றேன்.

09. இறுதி நேர்முகப் பரீட்சை நிறைவடைந்ததும், அனைத்து விண்ணப்பங்களும் மற்றும் அது சார்ந்த ஆவணங்களும் முறையாக இருப்பின், உங்களது பரிந்துரையுடன் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு 02 வாரங்களுக்குள் அவற்றை என்னிடம் சமர்ப்பிக்கவும்.

(ஒப்பம்)

பதிவாளர் நாயகம்

**பிரதிகள்:**

1. செயலாளர் - உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
2. அனைத்து மாகாணங்களுக்குப் பொறுப்பான உதவிப் பதிவாளர் நாயகங்கள்
3. அனைத்து பிரதேச செயலாளர்கள்
4. அனைத்து காணி மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர்கள்
5. தலைமை அலுவலகத்தின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள்